திருஞான முத்திரைக் கோவை : எண் 8.

# குருகூர்ப்பள்ளு


ஆழ்வார் திருநகரி

சடகோபப் புலவர்

இயற்றியது



பதிப்பாசிரியர்

பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்

திருஞானமுத்திரைக்கோவை: எண். 8.

சடகோபப் புலவர்

இயற்றிய

# குருகூர்ப்பள்ளு

சென்னை யூனிவர்ஸிட்டி
தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர்
S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L.,
எழுதிய

முன்னுரையுடன் கூடியது.

பதிப்பாசிரியர்:

பெரியன். வே. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்.

# பதிப்புரை

இந்தப் பிரபந்தத்தின் ஏட்டுப் பிரதியொன்று ஆழ்வார் திருநகரி மேலைத் திருமாளிகை திருவாய்மொழிப்பிள்ளை ஆசாரிய ஸ்வாமிகளிடமிருந்து கிடைக்கப்பெற்றேன். பிரதி கிடைத்ததும், அதனை ஸ்ரீ உ. வே. S. திருமலைசாமி ஐயங்காரவர்கள் கடிதத்தில் ஒருவாறாகப் பிரதிசெய்து உதவினார்கள். பள்ளுப் பிரபந்தத்தின் லட்சணங்களை யுணர்தல் அரிதாயிருந்தமையால் சிந்துக்களையும் செய்யுட்களையும் அடிவரையறை செய்து சுத்தப் பிரதியாக்குதல் தடைப்பட்டிருந்தது. இந்நிலையில் எனது நண்பர் ஸ்ரீமாந். S. வையாபுரிப் பிள்ளை யவர்களைச் (*Editor, Tamil Lexicon, Madras*) சந்திக்க நேர்ந்தது. அவர்களிடம் இப் பிரபந்தத்தைக் குறித்துப் பிரஸ்தாபித்தபொழுது, வேண்டும் உதவிகளைத் தாமே செய்வதாக மனமுவந்து ஒத்துக்கொண்டு அவ்வாறே செய்தார்கள். பயன் மிக்க முன்னுரை யொன்றும் அவர்கள் அன்போடு எழுதியளித்தார்கள். ஸ்ரீ திருமலைசாமி ஐயங்கார் ஸ்வாமிக்கும், ஸ்ரீ பிள்ளையவர்களுக்கும் எனது மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்,
ஆழ்வார் திருநகரி,
20—9—'32.

பெரியன். வே. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்
பதிப்பாசிரியன்.

# முன்னுரை

தமிழிலுள்ள நூல்களை ஒருவாறாக வகைப்படுத்தி, எண்ணி, தொண்ணூற்றாறென நமது முன்னோர்கள் வரையறைசெய்திருக்கிறார்கள். இப் பாகுபாடு கி. பி. 1732-ல் இயற்றப்பெற்ற சதுரகராதியில் காணப்படுகின்றது. சதுரகராதி யியற்றிய வீரமாமுனிவர் இப்பாகுபாட்டிற்கு ஆதாரமாகக் கொண்டநூல் இதுவென்று இப்போது விளங்கவில்லை. ஆனால், இப்பிரபந்தத் தொகை வீரமாமுனிவர் காலத்திற்கு முன்தொட்டே வழக்கிலிருந்து வருவதென்று நிச்சயமாய்க் கூறலாம். ஏனெனின், அவர்காலத்திற்கு முன்பிருந்த புலவர்களுடைய நூல்களிலே இத்தொகை குறிக்கப்பட்டுள்ளது. 'தொண்ணூற்றாறு கோலப்ரபந்தங்கள் கொண்டபிரான்' எனப் பழையதொரு நூலின்கண் வருகின்றது. வச்சணந்தி மாலையில் 55 பிரபந்தங்களும், பன்னிருபாட்டியலில் 60 பிரபந்தங்களும், இலக்கணவிளக்கப் பாட்டியலில் 77 பிரபந்தங்களும் விளக்கப்பட்டிருக்கின்றன. பிரபந்த மரபியல் என்ற நூலின் சிதைந்த பிரதி யொன்று அரசாங்கத் தொன்னூல்-நிலயத்தில் உள்ளது. இதன்கண் தொண்ணூற்றாறு பிரபந்தங்களும் கூறப்பட்டுள்ளன. இது போன்றதொரு நூலினை யாதாரமாகக்கொண்டே வீரமாமுனிவர் பாகுபாடு செய்தனரெனக் கருதுதல் தகும்.

இப் பிரபந்தத்தொகையிலே 'உழத்திப்பாட்டு' எனக் கூறப்படுவது தான் பள்ளுப்பிரபந்தமாதல் வேண்டும். இப்பாட்டின் இலக்கணத்தை விளக்குமிடத்துச் சதுரகராதியின் ஆசிரியர் முக்கூடற் பள்ளில்வருஞ் செய்திகளனைத்தையுங் கொடுத்துள்ளார். இதனைப் 'பள்ளேசல்' எனவும் 'பள்ளிசை' எனவும் வழங்குதலுண்டு. 'ஆரூர்த் தியாகர்க்குப் பள்ளேசல் பாடவே' என்று திருவாரூர்ப் பள்ளிற் பயின்று வந்திருக்கிறது. 'கனகநாயக முதலி விளங்கு பள்ளிசைபாட' என்பது தண்டிகைக் கனகராயன் பள்ளு. முக்கூடற் பள்ளிலும், வடகரைப் பெரியசாமித்துரை

மீது கடிகைமுத்துப்புலவர் பாடிய பள்ளிலும், இரண்டு பெயர்களுங் காணப்படுகின்றன.

பன்னிருபாட்டியலில்,

'புரவலற் கூறி யவன்வா ழியவென்
றகல்வயற் றொழிலை யொருமை யுணர்ந்தன
வெனவரு மீரைந் துழத்திப் பாட்டே'

என வோரிலக்கணம் வகுக்கப்பெற்றிருக்கின்றது. இதன்பொருளுணர்தற் கரிதாயிருப்பினும், இது பள்ளிசையைக் குறிப்பதன்றெனல் வெளிப்படை. இப்பாட்டியல் தோன்றியகாலத்தே பிறிதொருவகை 'உழத்திப்பாட்டு' இருந்ததெனக் கொள்ளல் வேண்டும். சிலப்பதிகாரத்தில் அரங்கேற்றுகாதையில் 'பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்து' என்று வரும் அடியினை விளக்குகின்ற இடத்திலே, விலக்குறுப்புக்கள் பதினான்கெனவும் அவற்றுள் 'வரி' யென்பதொன்றாமெனவும் அவ்வரியைப் 'பல்வரிக் கூத்து' என்பாரும் உளரெனவுங் கூறி, அக்கூத்துக்களின் வகைகளைத் தொகுத்து அடியார்க்குநல்லார் தருகின்றார். அவ்வகையுள்ளே 'ஆடும் படுபள்ளி' எனவொன்று காணப்படுகின்றது. இவ்வடியை நோக்கியவளவில் ஒரு கூத்துவகையினை இது குறிப்பதாகுமென எளிதிலுணர்தல் கூடும். இக்கூத்திணோடியைந்து பாடற்குரிய பாட்டொன்றும் இருத்தல் வேண்டும். இப்பாட்டின் இலக்கணம் யாதென இக்காலத்து அறிதற்குரிய கருவிகள் அறவே யில்லாதொழிந்தன.

இங்ஙனமாகப் பள்ளின் பூர்வசரித்திரம் இருளிற் புதையுண்டிருக்கிறது. ஆனால் 16-ம் நூற்றாண்டு தொடங்கி இதன் சரித்திரம் புலப்படக்கூடியதாயுள்ளது. மிகப்பூர்விக காலந்தொட்டுத் தமிழ் நாடுகளை ஆட்சிபுரிந்து வந்தவர்களான சேர சோழ பாண்டியர்களின் வமிசங்கள் அழிவுற்றுப் பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. போராண்மையில் மிக்கோரான நாயக்கவரசர்கள் ஆங்காங்கே சிற்றரசர்களையும் பிரதிநிதிகளையும் நிறுவி அரசுபுரியத் தொடங்கினர். தமிழ்மக்களது உள்ளத்தைக் கொள்ளைகொள்ளத் தக்க பெருநிகழ்ச்சி யொன்று மின்றி, நாட்டில் ஒருவாறாக அமைதி குடிகொள்ளத் தலைப்பட்டது. பெருங்கவலைகளும் பெருந்துன்பங்களு மில்லாது சலனமற்ற ஒருநிலையிலே அமைந்

தொழுகும் வாழ்க்கையின் நலங்களைப் பலவகையாகப் பேணிப் பெருக்குதற்கு மக்கள் முயன்றனர். உலகத்தைக் கலங்காமல் ஒருநிலையிலே நிறுத்த வல்ல அச்சாணி போன்றதாகிய உழவின் மேற் பெரிதும் கவனஞ் செலுத்தலாயினர்.

செய்யுளுலகின் கண்ணும் ஒருவகையான அமைதி ஏற்பட்டது. தன்னிகரில்லாத் தலைவன்மீது பாடுதற்குரிய பெருங் காப்பியங்கள் எழுதற்குச் சந்தர்ப்பம் இல்லாது போயிற்று. சிறு பிரபந்த வகைகளே தோன்றுதற்குத் தக்க காலமாய் முடிந்தது. பாட்டியலாசிரியர்கள் வகுத்த பிரபந்த வகைகள் பலவும் தோன்றலாயின. புத்தப்புது முறைகளில் நூதன நூல்கள் இயற்றுதலிலே தமிழ்க்கவிவாணரது மனஞ்சென்றது. இப் புதுவழியிலே முயன்று வந்தவர்கள் அவர்களைச்சூழ்ந்து நாடோறும் நிகழ்ந்து வரும் நிகழ்ச்சிகளையே தமக்குத்தக்க நூற்பொருளாகக் கொண்டனர். இந்நிலையில், உழவினைக்குறித்து நூல்கள் தோன்றுதல் ஒரு சிறிதும் வியப்பான காரியமன்று.

தமிழ் நாடு உஷ்ணப் பிரதேசத்தைச் சார்ந்தது. பெரும்பாலும் வெயிற்காலத்திலே, வெம்மை மிகுந்த பகலிலே, ஒதுங்க நிழலில்லாத வயற்காட்டிலே, காலை முதல் மாலைவரை ஓரே கவலையாய் உழைத்து வருபவர்கள் பயிரிடுவோர்கள். அவர்களுக்குச் சிரமந்தோன்றுதிருக்கவும், நேரம் எளிதிற் கழிந்து போவதற்காகவும், அவர்கள் வாழ்க்கையோடொத்த எளிய இனிய பாட்டுக்களைப் பாடுவது வழக்கமாயிருந்தது[1]. இவ்வகைப் பாட்டுக்களைத் தொகுத்து வைக்க நமது நாட்டில் யாரும் முயலவில்லை. ஆனால் இப்பாட்டுக்கள் ஒருநெறியில் அமையாதனவாய்ப் பற்பல தரத்தினவாய்த் தொகுத்தற்கு எளிதில் இடங் கொடாதனவாய் இருக்குமென்று நாம் ஊகித்தல் பொருந்தும். எனினும், ஏழை வாழ்க்கையின் இன்பப்பாட்டுக்களிற் பிறவிடங்களிற் காணுதற்கரிய வசீகரத்தன்மை நிரம்பியிருக்குமென்பது கூறுமலேயமையும்.

---

1. ‘கதிரைமலைப்பள்ளு’ என்பதனைக் குறித்து ‘அதுவே வயல்களில் வேலை செய்வோரால் அதிகமாக இக்காலத்திலும் படிக்கப்படுவதென்றும் பழங்கதைகளாகச் சொல்லக்கேட்டது’ எனத் தமது பதிப்புரையில் தண்டிகைக் கனகராயன் பள்ளினை வெளியிட்டவர் கூறுமாறும் இங்கே நோக்கத்தக்கது.

இவ்வசீகரத் தன்மையை முதன்முதலில் உணர்ந்து உழவு வாழ்க்கையை நூற்பொருளாகக்கொண்டு நூலியற்றிய கவிஞர் சிகாமணி யாவரென்பதை அறியும் பேறு நமக்கு இப்போது லபிக்கவில்லை. ஒருகால், தமிழிலக்கிய ஆராய்ச்சி பெருகப்பெருக, இவர் பெயர், வரலாறு முதலியன இனி வெளியாதலுங்கூடும். இப்போது கிடைக்கும் பள்ளுப்பிரபந்தங்களுள் 'திருவாரூர்த் தியாகர் பள்ளு' என்பதுதான் காலத்தான் முந்தியது எனக் கொள்ளவேண்டிய திருக்கின்றது. இதனை இயற்றியவர் கமலை ஞானப்பிரகாசரெனவும், இவரது காலம் 16-ம் நூற்றாண்டின் முற்பகுதியெனவும் ஸ்ரீ சோமசுந்தர தேசிகரவர்கள் அன்புடன் தெரிவித்தார்கள். இப்பள்ளு சோழமண்டல சதகத்திற் கூறப் பட்டுள்ளமை இங்கே அறியத்தக்கது. பள்ளுப்பிரபந்தங்களுள் தலைசிறந்து விளங்குவதும், செய்யுட்களின் நயத்தால் புலவர் பெருமக்களை யின்புறுத்தி வருவதுமாகிய முக்கூடற்பள்ளு வடமலையப்ப பிள்ளையின் காலத்தில் தோன்றியதாகும். பக்திப் பெருஞ்செல்வரும் தமிழ்வளர்த்த பெருந்தகையும் கவிஞரு மாகிய காவை வடமலேந்திரன் திருமுன்னர் அரங்கேற்றிய நூலென்பதற்குத்தக இது பெருமை வாய்ந்துள்ளதெனக் கூறி யிவ்வளவில் அமைகின்றேன்[1].

உழவருழத்தியரது வாய்ப்பாட்டாக நின்றுவிடாது புலவர் களாலியற்றப்பெற்ற பிரபந்தவடிவா யமைந்ததனாலே இந்நூற் பொருளுக்கு நூதனமான இயல்புகள் சில ஏற்பட்டன. முதலா வது கொச்சைத்தன்மை நீங்கி ஓரளவிலே நாகரிகத்தை இது பெற்றது. இரண்டாவதாக, பிரபந்தவிலக்கணத்திற் கேற்கக் குறிப்பிட்ட வொரு நெறியை மேற்கொண்டு தொடங்கி, இடை நிகழ்ந்து சென்று, முடிவுபெற்று அமைந்தது. மூன்றாவதாக, தமிழ் மக்களுட் பெரும்பாலாரிடை இது பரவத்தொடங்கியது. இப்பிரபந்தவகையினை மக்கள் கற்றுப் பாடி யின்புறத் தொடங் கினர். நான்காவதாக, பிரபந்தவமைப்பிலே நாடகச்சுவை பல படியாகப் பெருகுவதாயிற்று. இதனாலே இப்பிரபந்தம் நடித்துக்

---

1. இந்நூல் இதுகாறுந் திருத்தமுறப் பதிப்பிக்கப் பெறவில்லை. மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் ஒரு திருந்திய பதிப்பு வெளியிடக் கருதியிருக்கிறார்கள்.

காட்டத் தக்கதாய் முடிந்தது. ஆகவே இதனைக் கற்றுப் பாடி யின்புற்ற தமிழ்மக்கள் நடித்துக்கண்டும் இன்புறுவாராயினர். 'பள்ளு நாடகம்' என்ற வழக்கும் இப்போது எழுந்தது. மேற் கூறிய நல்லியல்புகளால் பள்ளுப்பிரபந்தம் தமிழ்நாட்டிற் பெரி தும் பிரசார மெய்துவதாயிற்று.

இந்நூற் பொருள் உழவருழத்தியரது ஏழைவாழ்க்கையைப் பற்றியதென முன்னரே கூறினோம். வாழ்க்கை ஏழைமையுற்றதே யெனினும் அதனையும் இனிமைபெறச் செய்து பெருமையளிப் பது காதலாகும். இக்காதலே பள்ளுப்பிரபந்தத்திற்கு உயிர் நிலையாயிருக்கின்றது. ஒரு பெரும்பண்ணையிலே பரம்பரையாய்ப் பயிரிட்டுவரும் பள்ளனொருவன் பள்ளியரிருவரை மணந்திருக்கின் றான். இவ்விருவருள் இளைய பள்ளியின் மையலிலே மோகித்துக் கிடந்து மூத்த பள்ளியையும் தன்னையும் ஒருங்கு மறக்கின்றான். பண்ணையிலே பயிர் செய்யும் பருவம் வருகின்றது. மழைபெய்து குளம் நிரம்பி, ஆற்றிற் பெருக்கெடுத்தோடுகின்றது. பண்ணைக் காரர் வந்து பள்ளனைத் தேடுகின்றார். மூத்த பள்ளியால் விஷயந் தெரிந்ததும், அவர் இளைய பள்ளியை அழைத்துக் கோபிக்கிறார். பள்ளன் மோகவலையினின்றும் வெளியேறி வருகின்றான். அவனி டம் பண்ணைச்செயலைக் குறித்துப் பண்ணைக்காரர் வினவுகின்றார். அவன் அச்செயலைக் கூறிமீள்கின்றான். மறுபடியுந் தன்னைமறந்து இளையாள் வீடே கதியாகக்கிடக்கின்றான். பயிர்த்தொழில் நடை பெறவில்லையென மூத்த பள்ளி பண்ணைக்காரரிடம் முறையிடு கின்றாள். அவர் பள்ளனை அழைத்துவரச் செய்து அவனைத் தொழுவில் மாட்டுகின்றார். மூத்தபள்ளி பயிரிடும்பொறுப்பைத் தானே ஏற்றுக்கொண்டு பள்ளனை மீட்கின்றாள். பின் விதை முதலியன சேகரிக்கப்படுகின்றன. உழவாகின்றது. அப்போது ஒரு காளை பள்ளன்மீது பாய்கின்றது. பள்ளியரிருவரும் புலம்பு கின்றனர். பின்பு விதைவிதைத்து நாற்றுநட்டுப் பயிர் விளைக்கப் படுகின்றது. பயிர் விளைந்ததும், பண்ணைக்காரருக்கு அறிவித்து அறுவடை செய்து நெல்லளத்தல் செய்கிறார்கள். இதனிடையில் மூத்த பள்ளியின் மனமுவப்பப் பள்ளன் நடந்துகொள்ளுகிறா னில்லை. தன்னை ஓரவஞ்சகமாய் நடத்துகிறானென்று அவள் முறையிடுகின்றாள். இது நிமித்தமாக அவளும் இளையபள்ளியும் ஒருவரை யொருவர் வைதுகொள்ளுகிறார்கள். முடிவில் சமா

தானமாகி இருவரும் மனமொருப்பட்டுப் பள்ளனோடு வாழ்கின்றார்கள்.

நூற்பொருளில் முக்கியமானவை இவ்வளவே. இவற்றையே கவிகள் தமது அறிவாற்றலுக்கு ஏற்றவண்ணம் சுருக்கியும், மாற்றியும், கூட்டியும் பிரபந்தம் அமைத்தனர். இடையிடையே அகப்பொருட்டுறைச் செய்யுட்கள் பயின்றுவர, பாட்டுடைத் தலைவன் பெருமை ஆங்காங்குத் தோன்ற, சிந்தும் விருத்தமும் விரவிவர இது பாடப்பெற்றது.

முற்காலத்திலே நிகழ்ந்துவந்த கூத்தாட்டுக்களெல்லாம் இப்போது மறைந்து வருகின்றன. ஆதலால் காட்சியளவிலேயும் கேள்வியளவிலேயும் இன்புறுத்திவந்த பள்ளுப்பிரபந்தம் நூலளவாக மாத்திரம் அமைந்து கற்கும் பயன் ஒன்றையே நமக்கு உதவும் நிலையில் வந்துவிட்டது. எனவே பிரபந்தத்தின் முக்கியமான அம்சங்கள் சிலவற்றை நாம் அறிந்தின்புறுதற்கு ஏலாதவர்களாயிருக்கின்றோம்.

இப்பொழுது வெளியிடும் 'குருகூர்ப்பள்ளு' அவ்வகை நூல்களுள் ஒரு கௌரவமான ஸ்தானம் பெறுதற்குரியதென்பது அதனைக் கற்போர் எளிதிலுணர்வர். பள்ளுப்பிரபந்தங்களுக்குரிய முக்கிய லட்சணங்களை யெல்லாம் அது பெற்றிருக்கின்றது; மிகச்சுருக்கமாகவும், நயமாகவும் அமைந்திருக்கின்றது. செய்யுட்களும் இனிமை முதலிய நலங்கள் பொருந்தியுள்ளன. இத்தகைய பிரபந்தத்தினை இயற்றியவர் சடகோபப்புலவர் எனப் பெயர்மாத்திரையால் அறிகின்றோமே யன்றி, இவரைப்பற்றிய வரலாறு வேறு யாதும் அறியக்கூடவில்லை. 'திருக்குருகூர் மகிழ் மாறன் பவனிக்குறம்' என்ற நூலின் ஆசிரியரும் இவரேயென்பது அந்நூற்பதிப்பினால் உணரலாகும். இவரது ஆசிரியர் பெயர் வயித்தியநாத கவிராயரென்பது இந்நூற் சிறப்புப் பாயிரத்தாலும், பவனிக்குறத்தில் வரும் குருவணக்கத்தாலும் அறியப்படுகின்றது.

என்னிடமுள்ள திவாகரப்பிரதி யொன்றின் முன்னேட்டில் 'வயித்தியநாத குருவே நம . . . சடகோபர் திவாகர ஏடு நீடூழி வாழ்க. திருஞான முத்திரை துணை' என்றும், இறுதியில் 'ஆஎயஎஅ விரிஷ வருஷம் தைமீ உயசஉ திங்கள்க்கிழமையும்

அனுஷமும் திசமியுமான சுபதினத்தில் சடகோபன் கவிராயருக்குத் திவாகரம் எழுதி முடிந்தது. திருவழுதி வளநாட்டுத் திருநகரி' என்றும் காணப்படுகின்றது.

இந்நூலாசிரியர் பெயரும் ஊரும் இவரது ஆசிரியரது பெயரும் மேற்காட்டிய ஏட்டுக்குறிப்போடு ஒத்திருக்கின்றன. இக்காரணங்களால் ஏட்டுக்குரியாரும் இந்நூலாசிரியரும் ஒருவரே எனத் துணிவது பொருந்துமாயின், இவர் இற்றைக்கு 230 வருடங்கட்கு முன்னர் வாழ்ந்திருந்தவ ரென்பது பெறப்படும்.

இந்நூலினை வெளியிட்டுதவிய அன்பர் பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாஸ ஐயங்காரவர்கள் வெகுகாலமாகத் தமிழார்வங்கொண்டு உழைத்து வருபவர்கள். ஆண்டில் இளையராயினும், தமிழன்னை மீதும் நம்மாழ்வார்மீதும் அவர் கொண்டுள்ள பக்தி விஷயத்தில் முதிர்ந்தவரென்றே கூறவேண்டும். முற்காலத்துச் சிறப்புற்று விளங்கிய வித்துவான்கள் இருந்த இடமுந் தெரியாத இக்காலத்திலே, அவர்களுடைய இல்லங்களைத்தேடிக் கண்டுபிடித்து, இறந்தனபோக எஞ்சியிருக்குஞ் சுவடிகளைச் சேகரித்து, அவற்றை நன்றாகப் பார்வையிடுவித்து, அச்சுவாயிலாகப் பிரசுரம் செய்வது எத்துணை அருமையான செயலென்பதை அச்செயலில் ஈடுபட்டவர்களே உணரவல்லவர்கள். இவ்வரிய செயலிலே பொருட் செலவையும் சிரமத்தையும் சிறிதும் பொருட்படுத்தாது, எப்பொழுதும் அச்செயலிலே கண்ணேக்கமுடையவராய் முயன்று வருகின்ற இவ்வன்பருக்குப் பகவத்கடாட்சம் நிரம்பவுண்டாகவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றேன்.

தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ்
20—9—'32. } S. வையாபுரிப் பிள்ளை.

ஸ்ரீ:

# குருகூர்ப்பள்ளு

## (பராங்குசப்பள்ளு)

### காப்பு

1. கொந்துலவு சோலைக் குருகைநக ராழ்வார்க்குச்
செந்தமிழாற் பள்ளேசல் செப்பவே—யிந்தநிலத்
தஞ்சமெனப் பஞ்சவருக் கன்றநடக் கின்றதுணைக்
கஞ்சமலர்ச் செஞ்சரணங் காப்பு.

### சிறப்புப்பாயிரம்

2. விண்டலத்தோர் புகழ்ந்தேத்துங் கங்கைகுலன் றமிழ்ப்பேரை
வேந்தன் கல்விக்
கொண்டலியற் றிருமேனி வயித்தியநா தன்பதமேற்
கொண்டு வாழ்த்தி
யெண்டிசையும் புகழ்குருகை யாழ்வார்க்குப் பள்ளேச
லிணங்கச் செய்தான்
தண்டமிழ்க்கன் னிப்பெருமாள் சடகோபப் புலவன்வல்லித்
தாமத் தானே.

## நூல்

### சிந்து

3. சீர்பூத்தருள் கூர்மறை தெளித்துயர்
செந்தமிழிசை முகுந்தனுக் களித்தவன்
திருச்சங்கணி துறைத்தவன் பொருப்பினில்
நிறைத்த வொண்புகழான்
பார்பூத்ததென் குருகைய ராதிபன்
பங்கயமுக நங்கை வரோதயன்
பண்பானபள் ளேசலைப் பேசவே
வண்பாரில்

ஏர்பூத்தவண் டுறைமலர்ப் பொய்கையி
னிறைமுதலொன் பதின்மர்கள் புகழு
ரிசைமதுரகவி முதுநா தமுனி
யெதிராசன்
நீர்பூத்தசெந் தாமரை மலர்மகள்
நிலமகள்பல கலைமக ளடியிணை
நினையாமுன மனமிசை தினமிருந்
தெனையாளும்.

## பள்ளியர் தோன்றுதல்

4. குணந்தருமுலை மலரலர் தருமெனக்
குறுநகைமுக மதிவிதி படைத்[த]திற்
கூந்தலைக்கரும் பாம்பென மாதவர்
குளிர்பு னல்மூழ்க
இணங்கிடையிறு மிறுமெல நடந்திடு
மிரங்குதல்பரங் காணென மாமல
ரிணையடியைப் பூண்டுகொண் டபையமிட்
டிருசிலம் பலம்ப
அணங்கரசென மங்கையர் கணந்தொழ
ஆடவர்மடல் தேடிநின் றேறிட
அனமெனச்சிறு பிடியெனப் படிமிசை
யடிகள் வைத்தழகால்
மணங்கமழ்குரு காபுரிப் பள்ளியும்
வளர்புகழ்ச்சீ ரங்கப் பள்ளியும்
வான்றருமுகில் மழைக்கெழு மயிலெனத்
தோன்றி னாரே.

## கலித்துறை

5. விரையே கமழு மகிழலங் காரர்நம் வீறர்வெற்ப
ருரையே தவறுமென் றோர்ந்தில னேவளை யூருமுன்னீர்த்
தரையே மடற்கைதை யேநெய்த லேவங்கந் தங்குகடற்
றிரையேகண் ணித்திரை யேதரு மோவென்கொல் செய்குவதே.

## பள்ளன் தோன்றுதல்

### சிந்து

6. கள்ளுடனே சுள்ளருந்திக் களித்து நெளித்துக்கருங்
 கச்சைகட்டிப் பச்சைமணித் தொண்டுகட்டியே
விள்ளரிய செம்பவள வொள்ளியதா வடங்கட்டி
 மெய்ப்பாக வாய்த்தசெம்பொற் றெப்பாரங்கட்டித்
துள்ளியமீ சைமுறுக்கித் தள்ளவிழுந் திறமாந்து
 துன்றுமணிக் கொட்டுத்தோளில் மின்றிலங்கவே
தெள்ளிய புகழ்நம்மாழ்வார் வள்ளமலர்த் தாள்பரவுஞ்
 சீபராங்கு சப்பள்ளன் றோன்றி னானே.

7. கத்தனையெண் ணுரைவாய்க் காலைவெட்டு வபோலிரு
 காலறவே வெட்டிவிழத் தட்டுவேன் கொட்டால்
கொத்தலர்பூ நாற்றுமுடி பிடுங்குவ போலமீறு
 கொடும்பாத கர்முடியைப் பிடுங்குவே னடுங்க
முத்துமிழ் கதிர றுத்துங் களத்தே குவிப்பனபோல்
 மூடரைய றுத்துப்போர்க்க ளத்தே குவிப்பேன்
சித்தமுவந் தாண்டருள்நம் மாழ்வார்பண்ணை வயலுழு
 தென்குருகைச் சீபராங்கு சப்பள்ள னானே.

### கலிப்பா

8. மின்னஞ்சு செம்பொன்மணி மேடையுஞ்செந் தாமரையும்
அன்னஞ்சேர் தென்குருகூ ராழ்வா ரணிவரைமேல்
வன்னெஞ்சர் போன வழிபார்த் துடன்போன
என்னெஞ்ச மென்னுடன்வந் தெய்துவதெக் காலமே.

### சிந்து

9. கனத்த குங்கும ம்ருகமத முங்கிய
 தனத்து மங்கைய ரினத்தே காமனக்
 கலைக்கி யானமு மோனமு மானமுங்—கமழ்தரு பெருமான்
சினத்து வாதியர் கனத்தை மோதிய
 தேவ னுவலர் தம்பிரான்
 திருநாமம் பாடியாடும் பள்ளினானே.

10. விரித்த கதிர்ச்சிலை தரித்த கரத்தினர்
மிகுத்த வரக்கர்வன் சிரத்தை நெரித்தவர்
வீறர் காவிரி யாற ர[ர]வணை—மீது கண்டுயில்வோர்
இரித்து முப்புர மெரித்த வரனிரப்
பரித்த திருவரங் கேசர்தந்
திருநாமம் பாடியாடும் பள்ளிநானே.

## கலித்துறை

11. வரும்போ தகஞ்சொன்ன மாலாதி நாதர் மணிச்சரணப்
பெரும்போதிற் செந்தமிழ் பாடிய மாறன் பிறங்கலன்னீர்
கரும்போ மொழிநற் சுரும்போ விழியென் றுங் கள்ளவைத்த
விரும்போ மனம்வந் திரும்போந் திரும்பியு மில்லிடத்தே.

## சிந்து

12. நெறியில் வாழறி ஞோர்நுகர் சேட
நினைந்து நீரில் நனைந்துபன் னுளும்
பிறிய மாக வருந்திப் பொருளைப்
பெருக்கி [ல்] வீழ்ந்துடல் தாழ்ந்துயிர் விட்ட
சிறிய நாயு முயர்பத மேவத்
தேவர் கொண்டவி மானத்தைக் கண்ட
மறவி லாத கருவூர ருந்தொழ
வாழ்வ ழுதி[நன்] னுடெங்கள் நாடே.

13. பாயிர மறை யேயு மணத்தூ ணின்
பந்தரிற் போட்ட கற்கோவில் நண்ணி
வேயி ரங்குசொல் நேய மலர்த்திரு
மேதி னிமகள் பாதம் வருட
ஆயி ரம்பண நாகணைப் பாயல்
அறிது யிலரங் கேச ருறையும்
தூய வண்புகழ் மேயவ ளந்திகழ்
சோழ மண்டல நாடெங்கள் நாடே.

14. அன்பு மேவிய பத்தருஞ் சித்தரும்
ஐந்து கேத்திர முஞ்செந் திருவின்
இன்ப மேவிய மாலன்றித் தேவொன் று
மேந்தி டாதவி மானமு மோங்கு

முன்பு சங்கனு மியானையும் வேடனும்
முத்தி வாழ்வுற நித்திய நல்குந்
தென்கு ருகூரெ னக்கூகை கூவுந்
திருவ ழுதி[நன்] றுடெங்கள் நாடே.

15. சூழ்தி ருமந்தி ரமதி லெட்டுந்
துலங்கு கோபுர முப்பத் திரண்டும்
வாழ்ப ரமபத வாயிலுந் தென்றல்
வந்து லாந்திரு முற்ற வெளியுந்
தாழ்பி றப்பே ழறுக்குநன் னீருறை
சந்தி ரபுட்க ரணியு மேவும்
ஊழ்வி னைதுடைத் தாளரங் கேசர்
உவந்து வாழ்திரு நாடெங்கள் நாடே.

## விருத்தம்

16. நாட்டுவளமுரைத்ததற்பின் மகிழ்ந்து சால
நன்மைதருங் கார்காலப் பருவ நோக்கித்
தீட்டுபுகழ்க் குருகைநக ராழ்வார் மேவுந்
திருவழுதி வளநாடு செழித்து வாழப்
பூட்டுபெருங் கருணைவரு ணனையே நோக்கிப்
புகழ்ந்துமழை நல்கெனவே புரிந்து கேட்ப
ஈட்டுதமிழ்ப் புவிதழைப்ப விமையோர் போற்ற
எங்குமழை பொழிந்தவா றியம்பு கேனே.

## ஆற்று வரத்து

### சிந்து

17. வெள்ளைக் கமலத் துள்ள மாதின்
மேகங் கடலுண் டோகையால்
மீண்டு பார்ப்பதி போன்று பொதிய
வெற்பிற் சொரிந்த பொற்பினுல்
தெள்ளு செந்தமிழ் வள்ளி கொழுநன்
திருவ டித்துணை பரவியே
திறவர் குறிஞ்சிக் குறவ ருறையுஞ்
சேரி முழுதும் வாரியே

கள்ள ருமலர்ப் பாலை வனத்தி
னுள்ளு றப்புகுந் தலைத்துமா
காளி பொன்மலர்த் தாளில் வீழ்ந்து
கடிய மறவர் குடியுடன்
கொள்ளை யாடித் துள்ளி யோடிக்
கோட்டை யுங்கள்ளிக் காட்டையுங்
குருக்கு மிருப்பை வருக்க முங்கெடக்
குறித்து முறித்துப் பறித்தடர்

18. முல்லை வனத்துட் புகுந்து குல்லை
முகுந்த னைத்தொழு தகன்றுபூ
முருந்துங் குருந்துஞ் செருந்தும் பொருந்து
மூட்டு டன்தினைச் சூட்டையும்
வல்லை யிற்கொன்றைக் கொல்லை யிற்சென்று
மறியு முறியுந் தறியும்பால்
மாடு மாயர் வீடுங் கூடும்
மண்டி யெடுத்துக் கொண்டுபோய்ச்
செல்வ மிகுந்த மருத நிலத்தி
னெல்லை புகுந்து பரந்துநீள்
சேணில் வச்சிர பாணி சரணந்
தீண்டி யேவரம் வேண்டியே
யல்லி யடருங் காஞ்சி வஞ்சி
யரும்பை யுஞ்செழுங் கரும்பையு
மடைந்த நாற்று முடியு முழவ
ரகமு நகமுங் கலப்பையும்

19. வாரி நெய்தற் பாரி லரண
வருணன் றருணச் சரணமே
வழுத்தி முழுத்த கடம்பு மடம்பு
மன்னு கேதகை புன்னையும்
ஏரி யளவ ரூரும் வளமு
முரசும் பாசுங் குரிசிலும்
முண்ட கங்களுங் கொண்டு மண்டி
முழங்கு கடற்கு வழங்கியே

பாரில் மலிந்த தேரிற் பொலிந்து
பாங்கி லோங்கு சோங்குடன்
படகு தோணி முடுகு பாறும்
பலசம் பானு மலையவே
பூரித் துயர்நன் னீரில் மீனும்
புணரி மீனு மணவியே
பொருநை யாறு பெருகி வார
புதுமை பாரும் பள்ளிரே.

20. தேளி கீளி யாரல் காரல்
திமிங்கி லகில மகரமீன்
திருக்கை வருக்கைச் சுறவு குறவை
தேடு மணலை யோடில்லம்
வாளை சாளை யயிரை பாரை
மத்தி யுஞ்சிறு பொத்தியு
மணிவ ராலு மணியி றாலும்
வழுவி லுளுவை கெளிறுடன்
கோளை யாள லொஞ்சான் பஞ்சான்
குதிரை மீனொ டானைமீன்
குற்றாய் நெற்றலி யசலை மசறி
கொய்மீன் செப்பலி நெய்மீனும்
தாளை வணங்கு பாளைக் கமுகிற்
றூறு சிதற மீறியே
தாவி மீண்டு வாவி தோயுந்
தன்மை பாரும் பள்ளிரே.

### கலிப்பா

21. அறங்காட்டு முத்திரைக்கை யாழ்வார் குருகையன்னீர்
மறங்காட்டுங் கன்னெஞ்சம் வைத்துமதன் போர்க்குடைந்தே
திறங்காட்டும் வில்லுமம்புஞ் சேனைமுலை யானைகொண்டும்
புறங்காட்டு கின்றதுபெண் புத்தியிது கண்டீரே.

### அணை யடைப்பு

### சிந்து

22. ஆறுகுள மொன்றுபோ லாச்சே—மேல
வாழங்கா லெனக்குமுதல் நீச்சே

தா றுமா றின் றுநட வாதே—கால்
தலைநோவ தென் றுகிட வாதே
சூறையிட முறையம்பிள்ளை வாரான்—ஏது
சொன்னாலு மவன்கோப மாறான்
கூறிய நாமாரை நோவோம்—கொட்டுக்
கூடைகளு மெடுத்துக்கொண்டு போவோம்.

23. தோட்டமெங்கு மொளித்தோட லாமோ—வீட்டிற்
சூதடித்து நாமிருக்கிற் போமோ
மோட்டுக்கால் முறையம்பிள்ளை கேட்டா—லொருவரையு
முன்போல முகம்பார்க்க மாட்டான்
கூட்டமிட்டுக் கொண்டிருப்ப தடைவோ—முரட்டுக்
குரட்டுக்கம் பாலேயடி படவோ
மேட்டிபண்ணி வார்த்தைகூ றுதே—நா
வீறர் திரு வுளத்திலே றுதே.

## விருத்தம்

24. சுற்றுக் குலைந்தீ யரித்தகண்ணுஞ்
சுருண்ட தலையு மிருண்டமெய்யுந்
தெற்றுப் பல்லு நின்றிலங்கச்
சீறிக் கையில் மாறெடுத்து
அற்றுத் தொடுத்த காதசைய
[அ]சனி யிடியே றெனவாற்றி
முற்றக் குரங்கு போல்நடந்தோர்
முறையம் பிள்ளை தோன்றினனே.

## அணை

## சிந்து

25. திட்டையிற் கொட்டாற்—சரியமண்
வெட்டிடப் பெரிய—பிரப்பங்
குட்டையு நாருப்
புட்டிலு நிரம்பக்
கட்டுடன் சுமப்பார்—குதிரைகள்
விட்டினி தமைப்பார்—நெட்டைக்
காம்புக ளிணைத்தே—திரைத்துயர்
பாம்புக ளணைப்பார்

26. அரணமைக் கெனவே—புனல்மடை
கரணடுக் கிடுவார்—நெடுங்கரை
அற்றிடு மெனவே—மாறு
தெற்றிட நினைவார்
முரணொடும் பறைகள்—தரணியின்
ணதிர நின்றறைய—நிறைகுள
முதுகரை கண்டே—குறையற
மதியுட னின்றே

27. மாறனு ருண்மைப்—பண்ணைக்
காறனுர் தம்மைக்—காண
வாரு மென்றவ ளுங்—கோழியு
நேருட னெடுத்தே
வீறுட னடக்கும்—வேளையி
லேறிடுங் களிப்பாற்—பள்ளன்
மிகவக மகிழ்ந்தே—பாடு
மியல்பது புகல்வாம்.

## விருத்தம்

28. குரைம ருவிய திரையெறி பொருனையங்
குருகை யம்பதி நங்கைகண் ணனவர்
விரைம ருவுதார் மகிழலங் காரர்நா
வீறு கொண்டநம் மாழ்வார் சிலம்பன்னுர்
வரைபொ ருதன மெழுதினுஞ் சிறியநுண்
மருங்கெ ழுதினுங் கருங்குழ லெழுதினு
முரையெ ழுதுவை சிலம்பொலி யெழுதுவை
யுளமெ ழுதுவை யெப்படி நண்பனே.

## குயிற்பாட்டு

### சிந்து

29. மனமொன்று நினையவே வாக்கொன்று தனையுரைக்கும்
வஞ்சருடல் துஞ்சவே—கூவாய் குயிலே
கனகவிதை பொழிவாணர் தமையிகழு வார்கொடிய
கடுநரகில் வீழவே—கூவாய் குயிலே

யனவரத மிரவலர்க ளினமகிழ வாடைசெம்பொ
னளிப்போர்கள் களிப்புறவே—கூவாய் குயிலே
தினகரோ தயமென்னு மகிழ்மாறர் திருக்கோவிற்
சிகாரியம் வாழக்—கூவாய் குயிலே.

விருத்தம்

30. அன்னை நன்முலைப் பாலுண் ணுதவ
ரன்பர் தம்மிடத் தன்பினு
ராயி ரத்தமிழ் பாயி ரம்பெற
வோது மாறர்வரை மீதிலே
வன்ன மென்மயிலை மின்னை நன்னய
வஞ்சி யையப ரஞ்சியை
வான கத்துருவை நாணி லத்திருவை
வரிவி ழித்தருவை யரிவையைப்
பன்னு செந்தமி ழின்னி சைக்கவி
பாடி யாடிவிளை யாடியோர்
பாயல் மேல்விரக நேய மாயுடன்
பரிந்து பாகிலை யருந்திநீள்
கன்னல் வேள்கலை சொன்ன லீலையிற்
கலந்த வின்ப நலத்தினாற்
கட்டி வாய்முத்த மிட்ட மார்க்கமது
காம னுக்குமரி தாகுமே.

பண்ணைக்காரன்

சிந்து

31. சார விருந்துயர் மாரி சொரிந்தன
பண்ணை யாண்டவரே—யாரந்
தங்கு[ம்] பொருனைநீ ரெங்கும் பரந்தன
பண்ணை யாண்டவரே
காரியம் பாராம லூரி லிருப்பதென்ன
பண்ணை யாண்டவரே—கீழக்
கடைக்கொம்பு மேல மறுகா லுடைக்குதே
பண்ணை யாண்டவரே
நேரங் கடந்துச்சி நேரங் கடந்ததே
பண்ணை யாண்டவரே—யின்னம்

நீங்காத நித்திரை யேன்காணும் கொள்கிறீர்
பண்ணை யாண்டவரே
ஏரி மதகுகால் சேர்வித மாகப்
பண்ணை யாண்டவரே—நமக்
கேற்க [வடை]த்தனம் பார்க்கவே வாருநீர்
பண்ணை யாண்டவரே

## விருத்தம்

32. தாதவிழி லஞ்சிமணி மார்பர்குரு கூரில்வரு
சடகோபர் தொடரிவரைமேற்
காதளவு தாவுவிழி மாதெனது விரகமயல்
கனவில்நன விலுநினைவிலாள்
ஆதரவு சொல்லியொரு தூதுவிடல் தொல்லைமிகு
மாசைநோய் பேசவெளிதோ
பாதகன னங்கன்மன மீரமிலை முல்லைதொடல்
பாருமினி யூருமடலே.

## சிந்து

33. பேசநாற்றம் வீசுமூற்றை வாயினழகு—மோர்போற்
பெருக்கா றெடுத்திழிந்த கண்ணி னழகும்
நாசி விழுந்தபூசை முகவழகு—மெந்
நாளும்வங்குப் பொங்குபங்க வங்கத் தழகும்
தூசடைந்த செம்பட்டை மீசையழகுந்—தப்பத்
தூக்கிவைத் திழுத்தகப்புக் காலி னழகும்
பாசிபற்றி மாசுற்ற பல்லழகுடன்—குருகைப்
பண்ணைக்கார நயினாருந் தோன்றி னாரே.

34. மொட்டைத்தேவாங் கழகரே கும்பிடுகிறேன்—பட்டி
மூஞ்சிக்குல்லா வழகரே கும்பிடுகிறேன்
சட்டித்தலை யழகரே கும்பிடுகிறேன்—ஓட்டைத்
தாழிவயிற் றழகரே கும்பிடுகிறேன்
கட்டைக்கை யழகரே கும்பிடுகிறேன்—நெட்டைக்
கழுத்திற்புண் ணழகரே கும்பிடுகிறேன்
அட்டைச்சொறி யழகரே கும்பிடுகிறேன்—பண்ணை
ஆண்டவரே ஆண்டவரே கும்பிடுகிறேன்.

## வெண்பா

35. என்றுதொழப் பண்ணை யிறைவ னகமகிழ்ந்தே
யன்றுபள்ளன் றன்னை யருகழைத்து—நின்றபல
வித்துவகை மாட்டுவகை மேழிகொழு கொட்டுமுதல்
வைத்தபடி சொல்லெனச்சொல் வான்.

## சிந்து

36. ஆதிவ ராகநயினார்—பாருழவுக்
கன்றிரண்டு கோட்டையெடுத்தார்
கோதில்பா ரதமெழுதவே—யைங்கரன்
கொண்டதங் கொருகோட்டையே
சோதிதரு நந்தீசுரக்—காளை
சுமந்திருப்ப திருகோட்டையே
பூதலமெல் லாம்பரிப்பவே—திசைக்கரிகள்
பொறுத்ததெண் ணென்குகோட்டை.

37. நேசமுற மணல்வாரியைப்—பொருனைமகள்
நீங்காது கைக்கொண்டனள்
கூசாம லறம்வளர்க்கவே—கண்ணுடிக்
கூத்தனையம் பிகைக்குதவினும்
பூசலழ கியவாணனை—வார்முரசம்
புடைக்கவரன் கொடுபோயினன்
பேசுதமிழ் மாறர்பண்ணைக்கோர்—முதல்பச்சைப்
பெருமாளிங் குள்ளதாண்டே.

38. வளருமான் மறைக்காளையோ—திருவுந்தி
மலர்மேய்ந்து குடிகொண்டதே
களபமுலை யிரதிபுணருங்—காளையிரு
கண்ணிலுங் காணவரிதே
புளகமயி லைக்காளையோ—வள்ளிதினைப்
புனத்திலே புகுந்துகொண்டதே
உளமகிழ வாழ்வார்களங்—காளை
யொன்பதின்ம ருள்ளதாண்டே

39. ஏய்ந்தபா ருழுதுதாக்கி—முறிந்த
தெண்ணிலாக் கலப்பைபோக்கி
ஆய்ந்ததுபார்க் கின்றதளவே—பண்ணைக்
கைந்நூறு கலப்பையுளவே
வேய்ந்தகொழுக் கொட்டுவகையி—லாயிரம்
மேல்வைத் தடித்ததொகையில்
தேய்ந்ததல் லாமலெழுநா—றுண்டென்னுஞ்
செய்திகேட் டனுப்பியபின்னர்.

## கலித்துறை

40. வன்னந் திகழ்கொங்கை ரண்டிள நீர்கொண்டு வந்தவர்பால்
முன்னஞ்ச லஞ்ச லெனவுநின் றேமொழி யாரிவரார்
என்னெஞ்சு நானுநம் மாழ்வார்வரையி லிரங்கமுழுக்
கன்னெஞ்ச ராயின ரேதெய்வ மேயுயிர் கைக்கொள்ளவே.

## மூத்த பள்ளி

### சிந்து

41. மருவு தார்ச்சீ பராங்குசப் பள்ளி
மறுத்து வந்து வெறுத்துரை செய்வாள்
பெருகு வண்புகழ்ச் சீரங்கப் பள்ளத்தி
பேய்க்கொ டைக்கெழு கோட்டை யளந்தான்
கருதி யேமுட்டைக் கோழிக்கு மாட்டுக்
கறிக்கு மீந்தது முப்பது கோட்டை
அருகு கம்பிப்பொற் சீலைக்குந் தாலிக்கு
மாக வீந்த தளவிலை யாண்டே.

42. பூட்டு மாசைக் கருமருந் தூட்டும்
புலைய னுக்காறு போர்க்காளை சேர்த்தான்
கூட்டு நல்ல பரிமள காரரைக்
கூட்டி மாடொன்ப தோட்டிக் கொடுத்தான்
ஆட்டு கின்றநல் லெண்ணெய்க்கும் வேட்ட
வரக்குக் கும்விற்ற தன்பது மாடு
ஈட்ட மானவர்க் கீந்த கொழுக்கொட்டுக்
கிலக்கி லைகண்ட திவ்வள வாண்டே.

43. பள்ள னைவேலை கொளவழைத் தாலோ
பாயி னூற்சுற்றி மாயமாய் வைத்தே
கள்ள நாடக மாடியே தேடிநான்
கண்டி லேனிந்த மண்டலத் தென்பாள்
எள்ள ளவுமதி யாம லாணையிட்
டில்லை யென்றவள் வல்லமை சொல்ல
உள்ள தென்றுநீர் தள்ளி நடந்தபி
ன்னோர்க லத்துண்டு சேருவ ராண்டே.

44. காகத் தின்கண்ணுங் கூகையுண் ணுக்கும்
கழுநிணமுங் குழிநரி மூக்கும்
நாகத் தின்பல்லும் பாகற்கொ ழுந்துமோர்
நச்செலி வாலும் பச்சைப் புழுகும்
பூகத் தின்னூரும் மாகத்தி னீருஞ்செம்
புற்றி லாந்தையுங் கற்றுழை வேரும்
வாகொக் கக்கூட்டிச் சேவற்கறியுடன்
மட்டில் லாமருந் திட்டன ளாண்டே.

45. செஞ்சொட் டியடி யொட்டிபின் னின்று
சிணுங்கி யானை வணங்கி பிணங்கி
மஞ்சொட் டியாடை யொட்டியே யெட்டி
மடிச்சீ லைகொட்டி தொட்டாற்கு வாடி
நஞ்சொட் டியமூ கண்ணியூ மத்து
நரிவி ரட்டி தொழுகண்ணி வித்தும்
நெஞ்சொட் டிப்போகக் கள்ளிலே கூட்டி
நிரம்ப வேமருந் திட்டன ளாண்டே.

## விருத்தம்

46. உம்பர்புகழ் காரிதரு மாறர்வரை யாரே
ஓராம லேதமியிற் றாரம்வரு வீரே
செம்பவள வாய்மலர் திறந்துரைசெய் யீரோ
சீறடிகள் நோம்வருட நீரிருநம் மரணே
கும்பமுலை கம்பமதத் தும்பியிரு கோடோ
கூந்தல்மலர் வாய்ந்தநறை தோய்ந்தகருங் காடோ
அம்பையடர் கண்ணிருசு ரும்பைநிக ராமோ
அஞ்சுவனக் கிஞ்சுகவாய்க் கொஞ்சுகிளி யாரே.

## மருந்தின் குணம்

### சிந்து

47. ஊட்டிய மருந்தே—பள்ளனை
வாட்டவே துரும்பா—யிரவினி
லுறக்கமுந் துறந்தான்—சோற்
றிறக்கமும் மறந்தான்—வேண்டுங்
கோட்டியே பிடிப்பான்—ஒன்றைச்
சாட்டியே யடிப்பான்—களப்பொலி
கூட்டியு மறியான்—ஏரைப்
பூட்டியு மறியான்—பண்ணை
மாட்டையுந் தேரான்—நின்ற
சூட்டையுஞ் சாரான்—உங்கள்
வயலையும் பாரான்—என்றன்
மயலையுந் தீரான்—மெல்லக்
காட்டிலே நடப்பான்—சென்றவள்
வீட்டிலே கிடப்பான்—வெந்த
கரிக்கட்டை யானான்—நிலத்திலுந்
தரிக்கொட்டா தாண்டே.

48. பேச்சுரை தணிந்தான்—வளர்நெடு
மூச்சிடத் துணிந்தான்—அவளன்பு
பெருக்கவே திரிவான்—போனாற்
கருக்கலில் வருவான்—சன்னை
யேச்சையுங் கணியான்—ஆசை
நீச்சையுந் தணியான்—ஊட
லீட்டமே படிப்பான்—தன்
னாட்டமே யடிப்பான்—நாளும்
மாட்சிமை யடையாள்—வேண்ட
பேட்சையு முடையாள்—சொன்ன
வார்த்தையுங் கடவான்—உமக்கவ
னேற்கவு நடவான்—இங்கே
போச்சுமக் கடிமை—அங்
காச்சினிக் குடிமை—இன்னம்

பொறுத்திடிற் பள்ளன்—களவுக
ளொறுத்திடா னுண்டே.

### கலித்துறை

49. கலையோர் துதிக்குநம் மாழ்வார் குருகைக் கனவரைமேல்
முலையோ மலைவெண் முலையோ நகைமுத் துமிழ்கருப்பஞ்
சிலையோ புருவஞ் சிலையோ வுருவஞ் சிறந்திலகா
விலையோ வுதர மிலையோ மருங்கு விளங்கொடிக்கே.

### மரத்திலடித்தல்

#### சிந்து

50. தன்வச மறந்தே யின்னமும்—பள்ளனுள்ளந்
தடுமாறி விடுமுன்னமே
சொன்னேன் குறைகள் தீரவே—யுள்ளதுமூரிற்
றாற்றரிக்கப் போறுனேற்கவே
பின்னையென் னுதிந் நேரமே—சிறையிற்போட்டுப்
பிணைக்கொள்வீ ரெனக்கேட்டவன்
அந்நேரங் கோப மேறியே—பள்ளனைப்பிடித்
தடித்தே மரத்திலடித்தான்.

51. கேட்டே யிளையா ளோட்டத்தி—லோடியேசென்று
கெடுத்தாளென் றெடுத்தென்சொல்வாள்
பூட்டக்கக்கள்ளி வார்த்தையைத் தாட்டோட்—டென்னுமற்
புத்தியென்றோ வித்தனைசெய்தார்
ஊட்டிட்டாள் நேற்றொரு பேய்க்கே—யெடுத்துவந்தா
லுண்ணுதே வம்புபண்ணுதே
பாட்டளி சூழ்திருவரங்க—ருண்டென் றிளைய
பள்ளிபோக மூத்தபள்ளியும்.

52. வெள்ளிக் கிழமை நள்ளிரு—ளுன்காவல்விட
வேங்கையடி வன்னியர்க்காங்கே
துள்ளுமறி யொன்று வெட்டிப்—பாற்பொங்கலிட்டுச்
சுள்ளும்பனங் கள்ளுங்கொணர்ந்தேன்
தெள்ளுதமிழ்ச் சீப ராங்குசப்—பள்ளாவுனக்கே
தெய்வமுண் டெழுந்திராயென்ன

கள்ளவுள் ளத்த ராயினு—மணம்புணர்ந்த
கணவர்க் கிரண்டுசெய்வரோ.

53. வித்துவகை மாடு கலப்பை—கொழுவுடன்மண்
வெட்டிகட னுடன்பட்டும்
பத்துநாளை யிற்குள் ளாய்முத—விடுவெனென்று
பள்ளன் சொல்ல மூத்தபள்ளியும்
எத்து மனத்து வகையா—லாண்டவர்மு
னீண்டியேகைக் காணிக்கைவைத்தே
சித்தந் திரும்பி மலையை—மஞ்சாடியாக்கித்
திரும்பவு மலையாக்குவீர்.

54. மோடி பணைநீ ரைத்தேடி—யுண்டதனல்
மோசம்பள்ள ளைப்பேசினேன்
காடுமே டெல்லா முழுதே—விதைத்தறுத்துக்
கட்டவேணு நெற்கொட்டாரத்தே
தேடும் புகழ்நம் பண்ணைக்கே—முன்னுள்ளதெல்லாம்
சேரவுத்த ரிப்பேனடியாள்
நாடி நாம் பயிரேற்றவே—கட்டளைமுற்று
நான்பிணை யெனவிட்டபின்.

## கலிப்பா

55. நாட்டமிமை யாருலகில் நானிலத்தில் மாமேரிற்
றீட்டுபுக ழாழ்வார் திருவழுதி நன்னாட்டிற்
பூட்டுநலம் பாராட்டிப் போனவன்பர் தந்தாசை
யேட்டி லடக்கி யெழுதத் தொலையாதே.

## மாட்டு வர்க்கம்

### சிந்து

56. காரிக்காளை யேரிச்சுளியன் நெட்டைக் கொம்பு [மொட்டையன்
கட்டைக்காளை கொட்டைப்பாக்கன் பொட்டைக் கண்ணன்
போருக் காளை வீரக்கழ லன்கூளிப்
புத்தனைப் படப்பாயும் பித்தன்புள்ளி வெள்ளையன்

மூரிக்காளை நீரிற்பதுங்கி வெட்டுத் தலை
முட்டிக்காலன் சுட்டிவாலன் முறிகொம்பன் சொறியன்
சீரியசெம் மறைக்காளை பாரிற் புகழ்
தீட்டும்பண்ணை மாட்டின்வகை யோட்டிவந்தே னண்டே

57. சந்தனத்தா லுந்துமேழி நுகமும் பொங்கு
தங்கத்திற் செய்தமைத்த துங்கக் கொழுவுஞ்
சுந்தரஞ்சேர் செந்துகிரேர்க் காலுஞ் சாலச்
சுடர்விடு மாணிக்கத் தாற்படை வாளும்
இந்துவன்னம் வந்தபட்டுக் கயிறும் கதி
ரேய்ந்தமர கதத்தாலே வாய்ந்த வுழக்கோலும்
அந்தமறை செந்தமிழ்தே ராழ்வார் பண்ணைக்
கையாயிரங் கலப்பைமெய் யாகக் கொணர்ந்தே.

58. அழகிய வாணன்சொரி குரும்பை பழ
கருச்சுனன் கருப்பூர மாணிக்கச் சம்பா
வழுதில்லை வித்தன்றிரு வரங்க னெங்கும்
மங்காமற் காத்தான் வாரி சிறைமீட்டான்
பழுதில்லாக் குளவாழை குறுவை பூம்
பாளைசெந் தாழைவண் டாளை பொற்பாளை
முழுவெள்ளை கண்ணுடிக் கூத்தன் விதை
முற்றும்வந்த தாண்டேயென்னச் சித்த மகிழ்ந்திடனே.

59. இன்று திருவிசாக மென்றூர் பஞ்சமி
யேற்றசுக்ர வாரயோகம் போற்றுசிங்கக் காணம்
நன்றிற் றனுமுகிழ்த்தந் துன்றப் பள்ளர்
நாதத் துடன்பல கீத முழங்கச்
சென்றி டெனக்கருட னென்றே யிடஞ்
செல்லவே சென்றே யொல்லையிற் பூட்டி
மன்றல் துன்றியவய லுழவே யேறு
மாறுகச் சீறிப்பள்ளன் காலிற் பாய்ந்ததுவே.

## கலிப்பா

60. கோடாது கூகை குருகூ ரெனவுறங்காச்
சேடாவ தாரத் திருப்புளிக்கீழ் மாறர்வெற்பிற்

ருடாண்மை பேசித் தனந்தேடிப் போனவன்பர்
பாடா விதியோ பகலும்வந் தாரில்லையே.

### சிந்து

61. பொய்சொல்லாத மெய்யாறுவான்
பூலி கடம்பா
வாலிக் குடும்பா
கைதவமோ செய்தவமோ
காளை தனக்கு
மேழை யானேம்
வெய்யபள்ளி கையின்மருந்தின்
வெறியோ தன்னை
யறியா னென்னைத்
தெய்வம்வேறு கண்டதுண்டோ
சீபராங்குசப் பள்ளா.

62. ஏரிங்குழவே சாருநேர
மிடையூ றுகத்
தடையூ றில்லை
ஆரிங்குதவி செய்வாருய்ய
அரசே யெனக்கும்
பிரசு தனக்கும்
பாரம்பொறுத்த பெயர்நின்போலார்
பழுதே வருமோ
யுழவா நமக்குச்
சீரங்கருண் டெழுந்திராய்நீ
சீபராங்குசப் பள்ளா.

### விருத்தம்

63. இச்சை யுடனே ருழுதுபரம் படித்து விதைத்த வியல்பதனால்
அச்ச மறவே வெள்ளிமுளை யாமா மென்ன வளர்ந்தோங்கிப்
பச்சை மாமால் வடிவுகொண்ட பருவ நாற்று நடவுலக
மெச்சு பண்ணை யாண்டவரே விருப்பாய் வந்தங் கிருப்பீரே.

### சிந்து

64. சாத்த னுழுத விருத்தியும் பள்ளன்
சடையன் முழுதுந் திருத்தியும்
தாத ளெற்றை முடங்கையுங் கட்டைப்
பூதன் சுற்றுக் கிடங்கையும்
கூத்தன் விதைத்த வயலை யுமுயர்
கோழி கிண்டிய [வ]யலையும்
குருந்தக் குடும்பன் சேற்றிலும் வெள்ளைப்
பருந்த னெடுங்க ணுற்றிலும்
பாத்தன் பிள்ளை குட்டமு மடர்
பாறைக் கரிசல் வட்டமும்
பரம னுண்டி காணியுஞ் செட்டி
பிரமன் வேண்டு தூணியும்
மூத்த நயினர் மேட்டிலும் நக்கர்
மூவர்க் குரிய பாட்டமும்
முடவன் கோரை பற்றியும் நாளை
நடவு காணு முற்றமே.

### கலிப்பா

65. வண்டலவு பூந்தடத்தின் வால்வளையின் முத்தையன்ன
மண்ட மெனச்சிறக ராலணைக்குந் தென்குருகூர்
முண்டகத்தோன் தந்ததிங்கள் மும்மாரி பெய்துவருங்
கொண்டல் தழைக்கக் குரவையிடும் பள்ளீரே.

66. வருகூர் கருணை மகிழ்ப்பருதி தோன்றிப்
பொருகூ ரகத்திருளும் புறத்திருளும் வண்டாகி
முருகூர் முளரியனல் மூழ்கவீழ் வாவிக்
குருகூர் தழைக்கக் குரவையிடும் பள்ளீரே.

### நடவு

### சிந்து

67. செஞ்சி லைமத னஞ்ச வேபுகழ்
தெரித்த வன்தமிழ் விரித்தவன்
திருமுத் திரைக்கை தரித்த வன்பெருஞ்
செல்வன் கல்வி வல்லவன்

பஞ்சின் மெல்லடி நங்கை கொங்கைப்
பாலுண் ணுத பாலகன்
பத்தர்க் கெளிதின் முத்தி யளிக்கும்
பரமன் குருகை வயலுள்ளே
வஞ்சி மருங்குல் துவளப் பவள
வாயிற் றூய நகைதர
மணிப்பொற் பதத்தி லணிக்கச் சிலம்பு
மலம்ப வளைகள் புலம்பவே
நஞ்சும் வடுவு மஞ்சி வெருள
நயன வேல்கள் புரளவே
நாடி யின்னிசை பாடி யாடி
நடுவோம் வாரும் பள்ளீரே.

68. மருதியுங் கட்டை முருகியும் நெட்டை
மாலை யுமுடச் சோலையும்
வன்னியுஞ் சின்னப் பொன்னியும் நல்ல
மங்கை யுமவள் தங்கையும்
அருதியும் பள்ளி யிருவியும் வெள்ளை
யகிலியுங் கள்ள முகிலியும்
ஆச்சியும் வள்ளி நாச்சி யுந்தமி
மூண்ணல் பண்ணை நடுகையில்
திருவி தனைக்கண் டுருகிப் பள்ளன்
தியங்கி வீழ்ந்து மயங்கியே
திடுக்கிட் டெழுந்து நடுக்கிட் டுடலிற்
சேறு துடைத்து வீறுடன்
பருதி முகத்தை பொருகை மறைப்பப்
பதுங்கி யெதிர்சென் றொதுங்கிவாய்ப்
பசப்பி லுந்தலை யசைப்பி லும்வசப்
படுத்து மனடி பள்ளீரே.

69. வன்னச் சேலை தன்னைச் சிறிய
மருங்கு நெருங்க விறுக்கியே
மார்பி னிற்றன பாரக் கோட்டில்
வடங்க ளடங்கப் பூட்டியே

சின்ன மதிநன் னுதலிற் றிலதந்
தீட்டி மைவிழி கூட்டியே
செப்ப மாக மாறர் பண்ணை
யொப்ப மாக நடுகையிற்
கன்னிவாழைத் தொடையி னும்விழிக்
கடையி னுஞ்சிறு கிடையினுங்
காதி னும்முகப் போதி னும்வளைக்
கையினுஞ் செய்ய மெய்யினும்
உன்னி யெழுந்த தனத்தி னும்பல
வுறுப்பினும் நல்ல கருப்பினு
முடையினு மன்ன நடையி னும்பள்ள
னிடைகி றானடி பள்ளீரே.

70. ஆயக் கயல்கள் பாயச் சீறி
யாளை மோதும் வாளைகண்
டன்னம் வெருவிச் செந்நெல் புகுநம்
மாழ்வார் பண்ணை வயலுள்ளே
நேயத் துவகை தோய மதுவை
நிரம்பப் பருகி வரம்பெலாம்
நிரைத்துக் குரவை யிரைத்து முடியை
நெடுகக் கடுக நடுகையில்
சாயப் பார்த்த குறிப்பி லேமதன்
சாபப் புருவ நெறிப்பிலே
சரிந்த கூந்தற் காட்டி லேமணி
தயங்கு செம்பொற் றேட்டிலே
வேயைப் பொருத தோளி லேயெழில்
விளங்கு நூபுரத் தாளிலே
மெய்யி லேவளைக் கையி லேபள்ளன்
நைகி றானடி பள்ளீரே.

71. பழும றைத்தமிழ் ஞான மோனப்
பரமன் குருகை வயலுள்ளே
பரந்து நாற்றை விரைந்து சேற்றுப்
பள்ளத் தேநடும் பள்ளியார்

அழகு தேமல் மார்பி லும்நுதல்
அரும்பி யெழுந்த வேர்வி லும்
ஆரத் திலங்கு சூலத் தும்மணி
யணிந்த பொற்பணிக் கோலத்தும்
ஒழுகு தாலி யிணையி லுஞ்சிறு
வுட்க ழுத்துமஞ் சணையிலும்
உரைத்த விங்கிதப் பேச்சி லுமவள்
உல்லா சக்கை வீச்சிலும்
முழுகு வன்னக் கலையி லும்மதி
முகத்திலும் நின்ற நிலையிலும்
மோதி ரச்சிறு விரலிலும் பள்ளன்
காதல் பாரும் பள்ளீரே.

72. முந்தி ரியரைக் காணி யரைமா
முக்கா ணியொரு மாவின்மேல்
மூலைக் கிடங்கும் வால முடங்கு
மூங்கி லடியிற் பாங்கெல்லாம்
உந்திக் கமலத் தந்த ணன்மறை
யோது மா றன் வயலுள்ளே
ஊரிற் பள்ளிகள் சேரக் கூடி
யுனக்கெ னக்கென நடுகையில்
குந்து காலன் மந்தி முகத்துக்
கூத்தன் மூளி சாத்தனைக்
கோட்டி கொள்ள நாட்டில் லாத
கோலங் கொண்டு சாலமாய்க்
கந்த மேவு தனங்கள் குலுங்கக்
கடைக்கண் போட்டு நகைத்திடுங்
கறுத்தப் பள்ளச் சிறுக்கி குள்ளக்
கள்ளி காணும் பள்ளீரே.

73. இரையுந் திரைக ளடருங் கடலி
லெழுந்த பொழுது விழுந்ததே
யென்ற வுரையில் நன்றெ னக்கரை
யேறி யேபசி யாறவே

யரிய கிண்ணத் துரிய மதுவை
யருந்து வார்கண் ணிழலைவண்
டாமென் றேச்சப் போத லன்றி
யந்த மதுவைச் சிந்துவார்
விரைவி லருந்து மதுவி லவர்தம்
விளங்கு வதனக் துளங்கலில்
வேற்று மாது நுகர்த லென்று
சீற்ற மீறித் தூற்றுவார்
வரையுங் கடலு நாடுங் காடு
மாடு மாடும் வீடுஞ்சேர்
மண்ணும் விண்ணுஞ் சுழல்வ தென்ன
மயக்கம் பாரும் பள்ளீரே.

## கலித்துறை

74. விண்ணுசை வைத்த பெருந்தேவர் போற்று விமலர் செந்தேன்
தண்ணுசை வைத்த வகுளா பரணர் சதுமறைநூற்
பண்ணுசை வைத்த தமிழ்ஞான மோனப் பரமரென்றும்
பெண்ணுசை வைத்தவர்க் கேனுசை வைத்தனை பெண்கொடியே.

## தாலாட்டு

75. அண்ட[ர்]தொழு தென்குருகூ ராழ்வார்க்கு வாய்த்தவயல்
எண்டிசையும் பண்ணைபயி ரேற்றப் பிறந்தானோ !

76. அன்னதருத் தென்குருகூ ராழ்வார் வயல்முழுதுஞ்
செந்நெல்நட வந்தபெருஞ் செல்வ மகளாரோ !

77. சேருடி சூழச் சிறந்த குடைநிழற்ற
வீறாய் முரசதிர விளையாடு வான்மகனோ !

78. அரவணையா னைப்பரவும் ஆழ்வார் வளவயலிற்
குரவையிட்டுக் களைபறிக்குங் கோமளப்பெண் ணாமுதோ !

79. வளஞ்சேர் குருகைமகிழ் மாற ரமுதுசெய்யக்
களஞ்சியத்தில் நெல்லளந்து கட்டப் பிறந்தானோ !

80. மருவாருந் தண்ணிலஞ்சி மாறர் களம்பெருக்கிப்
பெருவாழ் வெனக்குவரப் பிறந்த மகளாரோ !

### சிந்து

81. அடியவர் தொழுதேத்துங்—குருகூ
ராழ்வார் பண்ணைவயல் நடும்பள்ளியார்
கடிகமழ் வனசமலர்ச்—செங்கை
காந்த ளோவல்குல் பாந்தளோ
வடிவெழு சுடரிலைவேற்—கண்கள்
மாழை யோதொடை வாழையே[ா]
நடமிடு மயிலினமோ—வெனப்பள்ள
னகைக்கிறு னின்று திகைக்கிறான்.

82. இம்பர் தொழவாய்ந்த—ஆழ்வார்க்
கேய்ந்த பண்ணைவயல் நடும்பள்ளியார்
கும்ப முலைமலையோ—நாசி
குமிழின மோசொல் ல[மி]ழ்தினமோ
கம்போ மணிமிடறு—தோள்
கழையின மோயிடை யிழையினமோ
உம்ப ருலகணங்கோ—வெனப்பள்ள
னுரைக்கி றுளங் கரைக்கிறான்.

### கட்டளைக்கலிப்பா

83. பைய ரவின்ம ணிமுடி தாங்கிய
படிக டந்து படரும் பெரும்புகழ்
மெய்யன் முத்திரைக் கையனந் தேசிகன்
வீறன் றென்குரு காபுரி வெற்பனார்
மைய வார்விழி யம்பையு மொக்குமே
மணிக்கு றங்கு மரம்பையு மொக்குமே
செய்ய வாய்மொழி தத்தையு மொக்குமே
செவியி னுக்கமு தத்தையு மொக்குமே.

### சிந்து

84. பொற்புறு கருவி[ரு]ந்தீன் றற்ப ரெனவே
போதிலிறு மாந்துமடற் பொதியவிழ்த்துக்
கற்புடையா ரென்னத்தலை சாய்த்து வாய்த்த
கதிர்க ளறுத்தடித்துத் தூற்றியளந்து

வர்க்கவிதை கட்டித்திரு வாரா தனைக்கும்
வளஞ்சேர் களஞ்சியநெல் நிறைத்தபின்னர்
உற்றதமிழ் மாறர்திரு வுள்ள மகிழு
முரைத்தமி ழோர்க்கருள வாரீ ராண்டே.

85. வானுடர் தொழுமாறன் முனாள் பண்ணை
வருக்கங்கண் காணித்தன்பா லிருக்குநேரந்
தேனார்தண் டலைவிண் டடவு குருகூர்ச்
சிபராங்கு சப்பள்ளன் பூசல்வி[ளை]யுவான்
மேனாள்வம் புரைசெய்து போன பள்ளி
வேளைக்குச் சீவனமோர் நாளுந்தாராள்
ஆனாலுங் கண்டறியாச் சண்டைக் காரி
யாண்டாரு ஞாளியும்போற் பூண்டாளென்ற

86. வாறமு ழுதுஞ்செவி யேறக் கேட்டும்
வந்துகுரு கூரிற்பள்ளி முந்தமொழிவாள்
சீறவாள் நல்லதொன்று கூறி னாலுஞ்
சினத்தா லு மவளென்றால் மனத்திலோரான்
பேறுமெ னக்கேகுறை நாழி யளப்பான்
பெருத்த மரக்காலங்கே திருத்தியளப்பான்
மீறியே செய்தபிழை நூறு பொறுத்தும்
வேண்டாதா ளானேன்பண்ணை யாண்டே யென்ன.

## கலிப்பா

87. ஒப்பினால் மீறி யுயர்ந்தபுகழ் மாறர்வெற்பிற்
கொப்பினால் மேவுங் குழையீ ரெனைப்பார்த்தே
கப்பினால் மேவுமுலைக் கச்சணிவா வென்றொருகாற்
செப்பினால் வாய்முத்தஞ் சிந்துமோ சிந்தாதே.

## ஏசல்

## சிந்து

88. சென்மத்தை யெடுக்கவோ குருகூரிற் பள்ளிநான்
தன்மத்துக் குன்னை விட்டேன்—மீற
சிங்கத்தைப் பிடியானை பங்கப் படுத்துமதோ
இங்குப் பலியாதடி

கன்மத்தின் வலியாலே புலியைப் பசுநலிதல்
நன்மைக்கு வழியல்லவே—யென்ன
கலியோ வெலிகண்டு வெருகஞ்சு மெனவிஞ்சத்
திரிகின்ற த[ை]டவல்லவே.

89. திரிகின்ற நரிநாட்டுக் கூட்டத்துட் போய்முப்புச்
செலுத்துமோ வலுத்தாலும்—போடி
தீட்டிய மரத்திலே காட்டாதே கூர்மை பங்
தாட்டியே விடுவேனடி
விரிகின்ற தெருவுக்குள் ஒருவட்டம் வருதட்டி
பதிவிட்டே னெதிரிட்டடீ—மதிகெட்டு
வீணுகச் சீரங்கப் பள்ளி நீ யாணுவ
மெய்ப்பாகச் செப்பாதே.

## கலித்துறை

90. ஆகமு மாவியும் போலாதி நாதற் கணிபதமும்
பாகமுஞ் சேரத் தமிழ்செய்த மாறன் பணிவரைமேற்
ருகமு மோகமு மெந்நாளுந் தீர்க்குந் தனமிருக்கப்
போகவுங் காலெழு மோபொருள் மேலன்பு பூண்டவற்கே.

## சிந்து

91. கட்டுக்குலே யாதோவினி விட்டுக்காட்டி ருலுன்—போற்
காலுமயி ரும்பிடிப்பார் ஞாலத்து முண்டோ
முட்டிவிட்டுங் குனிவாயே குருகையிற் பள்ளி—நீ
மூத்தவளென் ருசைவைத்தால் மேட்டி பேசுவாய்.

92. மேட்டியோசீ ரங்கப்பள்ளி நாட்டமாய் நீரிற்—காக
மிக்காக மூழ்கினுலுங் கொக்காகுமோ
ஏட்டிலடங் காதவிசைப் பாட்டையும் பாடிப்—பத
ரெத்தனைகுத் திலுமுண்டோ சற்று மரிசி.

93. உண்டோ வரிசியென்ற குருகையிற் பள்ளி—பண்
டொட்டுச்சலு கைத்தனத்தை விட்டு விடடி
மிண்டோடி[ப்] பேசியென்னைத் தண்டுவா யாகில்—நின்
வீங்குமுலே யரிவாளால் வாங்கு வேனடி.

94. வாங்காயோ மீறிவிட்டாற் சீரங்கப் பள்ளி—மஞ்சள்
வாடைகூட்டி யுட்கழுத்தி னூடு பூசினல்
தேங்குபுனல் சூழுலகி லோங்கு மலைகள்—வீட்டிற்
சேரவரு முன்மருந்தை யாரு மறிவார்.

95. சேரவரு மென்றகுரு காபுரிப் பள்ளி—கொடுஞ்
சிங்கிபூட்டு மருந்திருந் திங்கே கூட்டினுற்
காரானை சிங்கமுத லோராமலே—யோடிக்
கடுகவரு முன்னிடத்தி லடிமை செய்யவே.

96. அடிமையென்று சொல்லவந்த சீரங்கப் பள்ளி—புற்றி
லாடரவு தேரைக்கஞ்சி யோடுமோ போடீ
தடமறியா திங்குவந்த தடவலத் தோண்டி—பார்க்கிற்
குட்டிமைக்கு நாட்டிலென்னைக் காட்டியு முண்டோ.

97. என்னைக்காட்டி யுண்டோவென்ற குருகையிற் பள்ளி—சன்னை
யின்றுசொன்னுப் போலேநாளை யொன்று சொன்னக்கால்
பின்னைப்பாரென் கையுமெய்யுஞ் சொன்ன நாக்குடன்—குத்திப்
பிடரியாலே வாங்கா விட்டாற் சடமீதோடி.

98. சடமீதோ வென்றுயே சீரங்கப் பள்ளி—மன்றிற்
றடியடியா லுன்னைவிழத் தாக்கி நாக்கையே
மடலோடே பிடுங்காவிட்டா லீது சென்மமோ—வன்றி
மார்பிலெழுந் ததுதன பார மல்லவே.

## கலித்துறை

99. வேயும் பகையிளந் தென்றலு மோபகை வீறடங்கத்
தேயும் பிறைபகை மாரனு மோபகை செந்தமிழ்நூல்
ஏயுங் குருகைநம் மாழ்வார் வரையி லிளங்கிளிகாள்
தாயும் பகையென் றுரைத்தழை யீரன்பர் தம்மையின்றே.

## சிந்து

100. ஏற்றல்லோ திருக் குருகூர்ப்—பள்ளி
நேற்றல்லோ வுலகறிய—வுண்மை
யிருக்குமுதல் வேதந்—தமிழ்
பெருக்க விரித்துரைத்தே

போற்றியு யர்வீடு—தாவெனச்
சாற்று முனந்தோற்றி—யன்பு
பூண்டு மாயவனல்க—வுங்க
ளாண்டைவேண் டியதில்லையோ.

101. மாயனோ சீரங்கப்—பள்ளி!
தூய திருப்புளிக்கீ—ழன்று
வந்திலக் கொருதேவின்—பல
வடிவாய் நின்று தாங்கி
ஏயு மெமதிருப்பே—தமி
ழாயுந் திருப்பதியாம்—படி
யெம்மைப்பா டெம்மைப்பாடென்—றோதினர்
தம்மைப்பா டினதாரடீ.

102. அடியோ திருக்குருகூர்ப்—பள்ளி
துடியோ விடுவிடடீ—பட
ரவுணர் மதமுவணக்—கொடி
யாயன டக்கின போற்
படியி லொருநொடியி—லினிப்
பரத்தா யுனைத்தூரத்தி—மீறு
பதைப்புஞ் சீறுமதர்ப்பு—மறப்
படுத்தி விடுத்திடுவேன்.

103. படுத்தி விடுத்திடுவா—யரங்கப்
பள்ளி யெங்கண் மூர்த்தி—யுடன்
பண்டுவா தியர்மீண்டு—பேசியே
பட்ட பாட் டிலிரட்டியாய்
முடித்த குழல்பிடித்தே—கழுத்
தொடித்தே யிழுத்தடித்தே—தடி
முகத்தி லடிவயிற்றி—லுதைத்
திடுவேன் பதைத்திடவே.

104. அப்போ திருவரையுந்—தர்க்க
மமைத்தே பண்ணைக்காரன்—பொன்
னரங்கேசரு மாழ்வாரு—மொன்
றல்லோ வின்று சொல்லவோ

ஒப்பிலாக் கடலுதன்—வேத
னூர்நீத்து மயோத்தி—வண்மை
யுயர்மா நகர்க்கன்றே—பொன்னி
யூடே யரிதுயின்றார்.

105. சாற்றுமு யர்பதத்தா—சையைத்
தவிர்ந்து குறுங்குடியி—லினி
தமர்ந்தே காரிமகவா—யன்று
தம்மைத்தாம் தமிழ்ப்பாடினர்
மாற்றமே தெனத்தடுத்தே—பல
வரிசை கொடுத்தனுப்ப—வுள்ள
மகிழ்ந்தே களித்துறவாய்—மனை
புகுந்தே யினிதிருந்தார்.

விருத்தம்

106. அருமறைதேர் பொலிந்துநின்ற மாமால் வாழி
ஆயிரத்தெட் டிதழ்க்கமலத் தணங்கு வாழி
குருகைநகர் வாழிதமிழ் மாறர் வாழி
குலவுபுகழ் கருடேசன் வாழி வாழி
மருமருவு பூந்தாம மிலங்கு மார்பர்
மதுரகவி யெதிராஜன் நாளும் வாழி
தருவெனவே யருள்தான சமயம் வாழி
தண்டமிழோர் வாழியனு தினமுந் தானே.

திருஞானமுத்திரை துணை

ஸ்ரீ பராங்குசப்பள்ளு
என்னும்
குருகூர்ப்பள்ளு முற்றும்.

ஸ்ரீ:

# குருகூர்ப்பள்ளின்

## செய்யுள் முதற் குறிப்பகராதி


| | | | |
|---|---|---|---|
| அடிமையென்று | ... 96 | காகத்தின் | ... 44 |
| அடியவர் | ... 81 | காரிக்காளை | ... 56 |
| அடியோதிருக் | ... 102 | குணந்தருமுலை | ... 4 |
| அண்டர்தொழு | ... 75 | குரைமருவிய | ... 28 |
| அப்போதிருவ | ... 104 | கேட்டேயிளையா | ... 51 |
| அரணைமக் | ... 26 | கொரந்துலவு | ... 1 |
| அரவணையானைப் | ... 78 | கோடாது கூகை | ... 60 |
| அருமறை தேர் | ... 106 | சடமீதோ | ... 98 |
| அழகியவாணன் | ... 58 | சந்தனத்தாலுந்து | ... 57 |
| அறங்காட்டு | ... 21 | சாத்தனுழுத | ... 64 |
| அன்புமேவிய | ... 14 | சாரலிருந்துயர் | ... 31 |
| அன்னதருத் | ... 76 | சாற்றுமுயர் | ... 105 |
| அன்னை நன்முலைப் | ... 30 | சீர்பூத்தருள் | ... 3 |
| ஆகமுமாவியும் | ... 90 | சுற்றுக்குலைந்தீ | ... 24 |
| ஆதிவராக | ... 36 | சூழ்திருமந்திர | ... 15 |
| ஆயக்கயல்கள் | ... 70 | செஞ்சிலைமத | ... 67 |
| ஆறுகுள | ... 22 | செஞ்சொட்டியடி | ... 45 |
| இச்சையுடனே | ... 63 | சென்மத்தையெடுக் | ... 88 |
| இம்பர் தொழ | ... 82 | சேரவருமென்ற | ... 95 |
| இரைபுந்திரைக | ... 73 | சேருடி சூழ | ... 77 |
| இன்று திருவிசாக | ... 59 | தன்வசமிழந்தே | ... 50 |
| உண்டோவரிசி | ... 33 | தாதவிழிலஞ்சி | ... 32 |
| உம்பர் புகழ் | ... 46 | திட்டையிற் | ... 25 |
| ஊட்டிய மருந்தே | ... 47 | திரிகின்ற நரி | ... 89 |
| என்று தொழப் | ... 35 | தேளிகிளி | ... 20 |
| என்னைக் காட்டி | ... 97 | தோட்டமெங்கு | ... 23 |
| எய்ந்த பாருழுது | ... 39 | நாட்டமிமை | ... 55 |
| ஏரிங்குழவே | ... 62 | நாட்டுவள | ... 16 |
| எற்றல்லோ | ... 100 | நெறியில் வாழறி | ... 12 |
| ஒப்பினுல் மீறி | ... 87 | நேசமுற | ... 37 |
| கட்டுக்குலை | ... 91 | படுத்திவிடுத் | ... 103 |
| கத்தனை யெண் | ... 7 | பழமறைத்தமிழ் | ... 71 |
| கலையோர் துதிக்கு | ... 49 | பள்ளனை வேலை | ... 43 |
| கள்ளுடனே | ... 6 | பாயிரமறை | ... 13 |
| கனத்த குங்கும | ... 9 | பூட்டுமாசைக் | ... 42 |

| | | |
|---|---|---|
| பேச்சுரைதணிந் | ... | 48 |
| பேசஈாற்றம் | ... | 33 |
| பையரவின்மணி | ... | 83 |
| பொய் சொல்லாத | ... | 61 |
| பொற்புறுகரு | ... | 84 |
| மருதியுங்கட்டை | ... | 68 |
| மருவாருந் | ... | 80 |
| மருவுதார்ச் | ... | 41 |
| மணமொன்று | ... | 29 |
| மாயனே சீரங்கப் | ... | 101 |
| மாறனருண்மை | ... | 27 |
| மின்னஞ்சு | ... | 8 |
| முந்திரியரைக் | ... | 72 |
| முல்லைவனத்துட் | ... | 18 |
| மேட்டியோ | ... | 92 |
| மொட்டைத் தேவாங் | ... | 34 |
| மோடி பனிநீரைத் | ... | 54 |
| வண்டுலவு | ... | 65 |
| வருகூர் கருணை | ... | 66 |
| வரும்போதகஞ் | ... | 11 |
| வளஞ்சேர் குருகை | ... | 79 |
| வளரு மான்மறைக் | ... | 38 |
| வன்னச்சேலை | ... | 69 |
| வன்னந்திகழ் | ... | 40 |
| வாங்காயோமீறி | ... | 94 |
| வாரிநெய்தற் | ... | 19 |
| வாறு முழுதுஞ் | ... | 86 |
| வானுடர் தொழு | ... | 85 |
| விண்டலத்தோர் | ... | 2 |
| விண்ணணைச | ... | 74 |
| வித்துவகை | ... | 53 |
| விரித்த கதிர்ச்சிலை | ... | 10 |
| விரையே கமழு | ... | 5 |
| வெள்ளிக்கிழமை | ... | 52 |
| வெள்ளைக் கமலத் | ... | 17 |
| வேயும் பகை | ... | 99 |


PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MYLAPORE, MADRAS.

## திருஞானமுத்திரைப் பிரசுராலயத்தின்
## வெளியீடுகள்

---

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| 1. | ஸ்ரீநம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதித் தாலாட்டு ... ... | 0 | |
| 2. | ஸ்ரீ சடகோபன் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 3. | ஸ்ரீ சடகோப திவ்யசரித்திரம் : தேவராஜ பாரதிகள் இயற்றிய காவியம் ... | 2 | 0 |
| 4. | ஸ்ரீராமாயணம் (பாசுரப்படி) : பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்தது ... | இனாம் | |
| 5. | துலைவில்லிமங்கலம் தேவர்பிரான் பேரில் சந்திரகலாமாலை ... | 0 | 1 |
| 6. | ஸ்ரீநம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் ... | 0 | 4 |
| 7. | திருக்குருகூர் மகிழ்மாறன் பவனிக[illegible]றம் ... | 0 | 4 |
| 8. | குருகூர்ப்பள்ளு ... | 0 | 6 |

கிடைக்குமிடம் :—

பெரியன். வெ. நா. ஸ்ரீநிவாஸய்யங்கார்,

திருஞானமுத்திரைப் பிரசுராலயம்,

ஆழ்வார் திருநகரி.